பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 30 வெள்ளிக்கிழமை 12.02.2021 கதிர் 330

## இலங்கையில் 1,78,087 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்!

இலங்கையில் கடந்த 29ஆம் திகதி முதல் நேற்று வரை ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 87 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவால் இலங்கைக்கு 5 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

2

# ‘மொட்டு’ கூட்டணிக்குள் தொடர்கின்றது மோதல்!

### 12 கட்சிகள் கூட்டாக விமலனின் வீட்டில் அவசர சந்திப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணிக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் கொழும்பு அரசியலில் களத்தில் அவசர சந்திப்புகளும் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் தேரர்கள் சிலர் இறங்கியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைத்துவம் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸ வெளியிட்ட கருத்தால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. தமது கட்சி குறித்து கருத்து வெளியிடுவதற்கு விமலுக்கு அருகதை கிடையாது எனப் பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் அறிவிப்பு விடுத்தமையுடன், விமல் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

2

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை விரைவில் நாடாளுமன்றில்!

### விவாதம் நடத்த அரசு தயார்; சபை முதல்வர் தினேஷ் உறுதி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல், அரசியல் பழிவாங்கல் ஆகியவை தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்தை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

2

## முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல்; தனிவழி செல்கின்றாரா ராதா எம்.பி.?



மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

2

## முன்னணியினர் 9 பேரை நீக்கும் முயற்சி பிசுபிசுப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.13

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிட்டுத் தேர்வான உறுப்பினர்களை, இன்னொரு கட்டமைப்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்கியமைக்காக உள்ளூராட்சி உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க முடியாது என யாழ் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் அமல்ராஜ் பதிலளித்துள்ளார்.

2

## ‘பெப். 14’ காதலர் தினத்தில் மோசடிகள் இடம்பெறலாம்!

### பொலிஸார் மீண்டும் எச்சரிக்கை

இலங்கையில் எதிர்வரும் 14 ஆம் திகதி காதலர் தினத்தை முன்னிட்டு சமூக வலைத்தளங்களில் மோசடிகள் இடம்பெறலாம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண மீண்டும் இன்று தெரிவித்தார்.

அத்தோடு, காதலர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்படுகின்ற

2

## மீண்டும் தாக்குதலா?

### கொச்சிக்கடை தேவாலயத்துக்கு மொட்டைக் கடிதம்; புலனாய்வுப் பிரிவு பல கோணங்களில் விசாரணை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று இலங்கையில் மீண்டும் தாக்குதல் இடம்பெறலாம் என்கின்ற மொட்டைக் கடிதம் காரணமாக புலனாய்வுப் பிரிவினர் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த கடிதம் அண்மையில் கொழும்பு -கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்குக் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2

## ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற கோட்பாட்டுக்காக முஸ்லிம் சட்டத்தை மாத்திரம் நீக்கிவிட முடியாது

### ரத்ன தேரர் எம்.பியின் கேள்விக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலடி



இலங்கையில் ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற அரசின் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் முஸ்லிம்களின் சட்டங்களை மாத்திரமன்றி மற்றைய இன, மத மற்றும் சமூகங்களுடன் தொடர்புடைய தனியார் சட்டங்களையும்

2

## வவுனியா உட்பட நான்கு இடங்களில் வீரியமிக்க கொரோனா வைரஸின் புதிய ரகம் அடையாளம்!

பிரிட்டனில் பரவும் வீரியம் மிக்க கொரோனா வைரஸின் புதிய ரகம், இலங்கையின் நான்கு கண்டறியப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய எதிர்ப்பியல் மற்றும் மூலக்கூறு மருத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர இவ்வாறு தெரிவித்தார்.



கொழும்பு, வவுனியா, அவிசாவளை, பியகம ஆகிய பகுதிகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களிடம் பெறப்பட்ட மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதிலேயே கொரோனா வைரஸின் B.1.1.7 என்ற புதிய ரகம் இனங்காணப்பட்டுள்ளது எனவும் வைத்தியர் சந்திம ஜீவந்தர கூறினார்.

2

**ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான விஞ்ஞான பாட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பகுதி - II நாளைய ‘காலைக்கதிர்’ நாளிதழின் காலைப் பதிப்பில் வெளிவருகின்றது. உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.**

## முன்னணியினர் 9 பேரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து 9 பேர் நீக்கப்பட்டனர் எனத் தெரிவித்து அக்கட்சியின் செயலாளர் செ. கஜேந்திரன் உறுப்பினர்களிற்கு கடிதம் அனுப்பியமையோடு தேர்தல் தெரிவத்தாட்சி அலுவருக்கும் அது குறித்து அறிவித்துள்ளார்.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட கடிதம் தொடர்பிலேயே யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் அமல்ராஜ் பதில் அனுப்பி வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் குறித்த உறுப்பினர்கள், அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டால் மட்டுமே அது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய முடியும் எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் தாக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை, மத வழிபாட்டுதலம் ஆகிய பகுதிகளுக்கு தாக்குதல் நடத்தப்படலாம் என்று குறித்த கடிதத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கடிதத்தை அடுத்து கடற்கரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கொச்சிக்கடை தேவாலயத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

## 'ஒரே நாடு - ஒரே சட்டம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்க வேண்டும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்நிலையில் முஸ்லிம்களின் சட்டங்களை மாத்திரம் நீக்க வேண்டுமென்று கோரிக்கைகளை விடுப்பது இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளையே தோற்றுவிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முஸ்லிம் விவாக - விவாகரத்து சட்டத்தை நீக்கும் தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்த அபே ஜனபல கட்சி எம்.பியான அத்துரலிய ரத்தன தேரர், இது தொடர்பாக நீதி அமைச்சரிடம் சில கேள்விகளையும் முன்வைத்திருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு நீதி அமைச்சர் இன்று சபையில் பதிலளித்தார்.

இதன்போது இலங்கையில் கண்டிய சட்டம், யாழ்ப்பாணம் திருமணச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் விவாகச் சட்டம், பௌத்த கிராமங்கள் மற்றும் விகாரைகள் சட்டம், இந்துக் கலாசார சட்டம் எனப் பலதரப்பட்ட தனியார் சட்டங்கள் செயற்பாட்டில் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு இருக்கையில் முஸ்லிம்களின் சட்டத்தை மாத்திரம் நீக்க வேண்டுமென்று கோஷமிடுவது இன முரண்பாடுகளுக்கே கொண்டு செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி நாட்டில் ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் தனியார் சட்டங்கள் அனைத்தையும் ஒன்றாக இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வவுனியா உட்பட நான்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள கொரோனாவின் மூன்றாவது ரகம் இது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பிரிட்டனுடன் தொடர்புடைய கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள இரண்டாவது சந்தர்ப்பம் இது வாகும்.

கொரோனா வைரஸின் புதிய ரகங்கள் உலகலாவிய ரீதியில் தற்போது வரை 50 நாடுகளில் பரவியுள்ளன என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'பெப். 14' காதலர் தினத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட விரோத கொண்டாட்டங்கள் தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, போலிச் செயற்பாடுகள் மூலம் பொதுமக்கள் ஏமாற்றப்படலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்குச் சிறப்புக் குழு செயற்பாட்டில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் காதலர் தின விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினரின் அனுமதி கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான காலப்பகுதிகளில் போலியான அழைப்புகள் தொலைபேசிகளுக்கு வரலாம் எனவும் எச்சரித்துள்ள அவர், பண மோசடிகளும் இடம்பெற வாய்ப்புள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஈஸ்டர் தாக்குதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து நாடாளுமன்றத்தில் இன்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது முன்னைய ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் இதுவரை வெளிவரவில்லை என்பதை அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தமது ஆட்சியில் முக்கியமான இந்த இரண்டு ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகளையும் வெளிப்படுத்த வேண்டிய தேவை தமக்கு இருக்கின்றது எனவும், விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் வாக்குறுதியளித்தார்.

## முற்போக்குக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத்தில் உதயமான கூட்டணிகளுள் நான்கு வருடங்களுக்கு மேல் தாக்குப்பிடித்து நின்ற கூட்டணி என்ற பெருமை தமிழ் முற்போக்குக் கூட்டணியையே சாரும். அவ்வாறானதொரு கூட்டணிக்குள்தான் தற்போது முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அ.அரவிந்குமார் எம்.பியை, தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடைநிறுத்திய நிர்வாகக்குழு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைத்தது.

எனினும், மலையக மக்கள் முன்னணி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அரவிந்குமாரை கட்சியில் தக்கவைத்துக்கொள்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல சம்பள உயர்வு போராட்டத்துக்கான ஆதரவையும் மலையக மக்கள் முன்னணி தன்னிச்சையாக வெளியிட்டதால் இதர இரு பங்காளிகளும் அக்கட்சி மீது அதிருப்தியில் இருக்கின்றன.

இந்நிலையில், அடுத்துவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இல்லாமல்தான் போட்டியிட வேண்டும் எனத் தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்விடயம் உட்பட மேலும் சில காரணங்களாலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## 'மொட்டு' கூட்டணிக்குள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், சிலர் விமலை அரசிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினர். இதற்கு விமலும் பதிலடி கொடுக்கப் பிரச்சினை உச்சம் தொட்டது.

இந்நிலையில், அரசுக்கு ஆதரவு வழங்கும் 12 கட்சிகளின் தலைவர்கள் விமல் வீரவன்சவின் வீட்டில் நேற்றிரவு அவசர சந்திப்பை நடத்தினர். இதன்போது அரசைப் பாதுகாக்க வேண்டும் எனவும், கூட்டுப் பொறுப்புடனும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையின்போது ஒருமித்த குரலில் கருத்து வெளியிட வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இத்தகையதொரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும், சர்ச்சை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

## இலங்கையில் 1,78,087...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்குச் செலுத்த முடியும்.

அந்தவகையில் முதற்கட்டமாக கொரோனா ஒழிப்பு சமரில் முன்களப் பணியாளர்களாகச் செயற்படும் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்குக் கொரோனாத் தடுப்பூசி கடந்த 29ஆம் திகதி முதல் ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி 29ஆம் திகதி 5 ஆயிரத்து 286 முன்கள பணியாளர்களுக்கும், 30ஆம் திகதி 32 ஆயிரத்து 539 பேருக்கும், 31ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும், 2ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், 3ஆம் திகதி 21 ஆயிரத்து 147 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன், 4ஆம் திகதி 6 ஆயிரத்து 413 பேருக்கும், 5ஆம் திகதி 9 ஆயிரத்து 983 பேருக்கும், 6ஆம் திகதி 3,838 பேருக்கும், 7ஆம் திகதி 1,625 பேருக்கும், 8ஆம் திகதி 5,989 பேருக்கும், 9ஆம் திகதி 6,431 பேருக்கும், 10ஆம் திகதி 2,532 பேருக்கும், 11ஆம் திகதி 1,362 பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.


## காணி, கடை விற்பனைக்கு

1. தெல்லிப்பளையில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
2. உடுப்பிட்டியில் மாடிக்கடை விற்பனைக்குண்டு.
3. கடைகள், வீடுகள் வாடகைக்குண்டு.
4. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமிள முலையில் 2 ஏக்கர் காணி வியாபாரப் பதிவுடன் விற்பனைக்குண்டு.

வியாபாரப் பதிவு மாற்றித்தரப்படும்.

**அலுவலகம்:-**
குஞ்சர்கடை அருகாமை,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

**தொடர்புகளுக்கு:**
0773434415
0778578528

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம்-**
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசுடன் சேர்ந்து பழி சுமக்க பௌத்த மகா சங்கமும் தயார்

இலங்கை அரசைப் பொறுத்தவரை அடுத்த ஒன்றரை மாத காலம் மிக நெருக்கடியானது.

சர்வதேச உறவாடல் விடயத்தில் தவறான அணுகுமுறைகள், கையாளுகைகள் காரணமாக பெரும் தவறிழைத்து விட்ட கொழும்பு அரசு, அதன் விளைவுகளை – பெறுபேறுகளை – பலன்களை – எதிர்கொள்வதற்கும் சேர்ந்து சுமப்பதற்கும் பங்காளிகளைத் தேடுகின்றது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வரும் மாதத்தில் இலங்கை விவகாரம் எடுக்கப்படும் போது சர்வதேச சமூகம் தீர்க்கமான பல முடிவுகளைத் தீர்மானிக்கும் பேராபத்து இருப்பதை இப்போது காலம் பிந்தியாவது கொழும்பு உணர்ந்து கொண்டுள்ளது.

யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கழியும் வரை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவோம், பூர்த்தி செய்வோம் என்று கூறிக் கூறியே காலத்தை இழுத்தடித்து விட்டு, இப்போது கையை விரிப்பது போல, சர்வதேசத்தையே மொட்டை போட்டு ஏமாற்றும் கைங் கரியத்தை கொழும்பு திமிர்த்தனத்துடன் மேற்கொள்வதை சர்வதேச சமூகம் ஏமாளியாகப் பார்த்திருக்காது என்பது நிச்சயம்.

யோகர் சுவாமியின் மகா வாக்கியத்தில் கூறுவதானால், இது ‘எப்போதோ முடிந்த காரியம்’.

2009 ஜூனில், இலங்கையின் முப்பது வருட கால யுத்தம் இலங்கை அரசின் மிக மோசமான யுத்த நடவடிக்கைகள் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட கையோடு, இலங்கைக்கு வந்த அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டறிக்கை வெளியிட்ட போதே இந்த விவகாரம் இந்தத் திசையில் தான் நகரும் – நகர முடியும் – என்பது தீர்மானிக்கப்பட்டு விட்டது.

இடையில் நான்கரை, ஐந்து ஆண்டுகள் பதவியிலும், ஆட்சியிலும் இருந்த நல்லாட்சி அரசு செய்தது, பெரும் கொள்கை மாற்றம் ஏதுமல்ல. ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அப்போதைய ஜனாதிபதி கூட்டறிக்கையின் மூலம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் – நிறைவேற்ற இயலாமல் – காலத்தை இழுத்தடித்தமை மட்டும்தான்.

தாங்கள் அதிகாரத்துக்கு ஆட்சிக்கு வருவதற்காக நல்லாட்சி அரசின் ஜெனிவா தொடர்பான அந்த நடவடிக்கையை தேச விரோத விவகாரமாக பெரிய படம் காட்டியவர்கள் இப்போது அதற்கு மேல் அந்த விடயத்தைக் கையாள முடியாமல் தடுமாறுகின்றார்கள்.

ஜெனிவாவில் எதிர்கொள்ளப் போகும் நெருக்கடிகளின் விளைவுபடுசூடாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டுள்ளமையால், அதனைத் தம்முடன் சேர்ந்து சுமப்பதற்கான தரப்புகளை கொழும்பின் இப்போதைய ஆட்சியதிகாரம் தேடுகின்றது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படக் கூடிய புதிய பிரேரணை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு சமர்ப்பிக்கவிருக்கும் அவதானிப்பு அறிக்கை ஆகியவை தொடர்பில் பௌத்த மகா சங்கத்தினரின் ஆலோனையைப் பெறும் கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றதன் பின்னணி இதுதான்.

ஜெனிவாவில் புதிதாக வரக் கூடிய பிரேரணையின் விளைவாக நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள், அரச முக்கியஸ்தர்கள் மற்றும் படை அதிகாரிகளுக்கு எதிராகச் சர்வதேசப் பயணத் தடைகள், சர்வதேச நாடுகளின் ஆதரவு கிடைக்காமை, சில சர்வதேச நலன்களை வழங்கும் விடயங்களில் இலங்கையைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்து கொள்ளுதல் போன்ற பல்வேறு கெடுபிடி அம்சங்கள் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

நாட்டின் நிர்வாகம் இராணுவ மயப்படுத்தப்படல், பேரினவாத மேலாண்மை போக்கும், இனவெறிவாதமும் தீவிரமடைதல், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்லன் முனையத்தை இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து அபிவிருத்தி செய்யும் சர்வதேச இணக்கப்பாட்டுக்கு வந்து விட்டு, ஒரு தலைப்பட்சமாக அதிலிருந்து வெளியேறுதல் போன்ற கொழும்பு அரசின் தான்தோன்றித்தனமான போக்குகள் குறித்து அதிக கவலையும், கவனிப்பும், சிரத்தையும், விசனமும் கொண்டுள்ள சர்வதேச தரப்புகள் அத்தகைய கொழும்பின் போக்குக்கு ஒரு ‘செக்’ வைக்கும் வாய்ப்பாக ஜெனிவாவைப் பயன்படுத்த முனைகின்றன என்பதும் வெளிப்படையானது.

சரியோ, பிழையோ தற்போதைய அரசின் தவறான கையாள்கையினால் பாதிப்படைந்துள்ள சர்வதேச உறவாடல்கள் விபரீதமான விளைவுகளை– பெறுபேறுகளை – தந்து நிற்கப் போகின்றன.

அதற்கான பழியை – பொறுப்பை – தங்களுடன் கூட்டுச் சேர்ந்து சுமப்பதற்கு மகா சங்கத்தினரையும் கொழும்பு ஆட்சிப் பீடம் அணி சேர்த்து விட்டமை ஆட்சிப் பீடத்துக்கு ஒரு வெற்றிதான்.

## கோப் குழுவினரின் பரிந்துரைகளை செயற்படுத்த கடமைப்பட்டுள்ளேன்!

### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கோப் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தத் தான் கடமைப்பட்டுள்ளேன் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில் இந்த பரிந்துரையை தான் செயற்படுத்துவார்எனவும், இது தொடர்பாக ஒருபோதும் அச்சமடைய வேண்டாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று (வியாழன்) நாடாளுமன்ற கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் 2017, 2018 ஆம் ஆண்டு நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கை, மற்றும் அதன் செயற்திறன் பற்றியும் ஆராயப்படவுள்ளன.

## 1,000 ரூபா சம்பள உயர்வை ஏற்கமுடியாது சிறு தோட்ட உரிமையாளர்கள் சங்கம்!

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என சிறுதோட்ட உரிமையாளர்கள் சங்கமும் தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கமும் அறிவித்துள்ளன.

கடந்த தினம் கூடிய சம்பள நிர்ணய சபை, இறப்பர் மற்றும் தேயிலை துறைசார்ந்த பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களது அடிப்படை சம்பளத்தை 900 ரூபாவாகவும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 100 ரூபாவாகவும் அதிகரிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்த நிலையில், சம்பள உயர்வு அதிகரிக்கப்படுவதானது, சிறுதோட்ட உற்பத்தியாளர்களையும் தனியார் தேயிலை தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்களையும் பெரிதும் பாதிக்கும் என்று குறித்த சங்கங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, சம்பள நிர்ணய சபையின் இந்த தீர்மானத்துக்கான ஆட்சேபனையை முன்வைக்கவிருப்பதாக பெருந்தோட்ட நிறுவனங்களது ஒன்றியமும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திக்கோடையில் யானை தாக்கி பெண் ஒருவர் படுகாயமடைவு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியில் யானை தாக்கி பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

திக்கோடை புதிய 50 வீட்டுத்திட்ட கிராமத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை தனது வீட்டுக்கு அருகில் தாயும் தனது மகளும் வெளியில் செல்லும்போது காட்டு யானை துரத்தி வந்து தாக்கியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த தாயார் அயலவர்களின் உதவியுடன் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது திருமேனி தமிழ்மலர் என்ற மூன்று பிள்ளைகளின் தாயே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டுத் திட்டங்களை சுற்றி அடர்ந்த காடுகளும் இருப்பதால் மக்கள் வசதிகள் இன்றி கஷ்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானை ஒவ்வொரு நாளும் வருவதாகவும் தினமும் இரவு,பகல் வேளைகளில் அச்சத்துடனேயே தாம் வசித்துவருகின்றனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## லுணுகலை ஹெக்கிரிய பகுதியில் நிலநடுக்கம்!

லுணுகலை – ஹெக்கிரிய பகுதியில் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை சிறியளவான நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவு கோலில் ஒரு புள்ளிக்கும் குறைவான அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

கடந்த 22ஆம் திகதி வலப்பனை பகுதிக்கு அருகில் 1.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது. அத்துடன் மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெக்கிரிய பிரதேசத்திலுள்ள சில பகுதிகளிலும் நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். தொடருக்கான வீரர்களின் ஏலப் பட்டியலில் யாழ்.இளைஞன்!

நடப்பாண்டுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் வீரர்களுக்கான ஏலம் எதிர்வரும் 18 ஆம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது.

இந்த ஏல பட்டியலில் 292 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் 1,114 வீரர்கள் பதிவு செய்திருந்த நிலையில் தற்போது இறுதி பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் 31 இலங்கை வீரர்களில் ஒன்பது பேரின் பெயர் ஏல பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் விஜயகாந்த் வியஸ்காந்த் பெயரும் இடம்பெற்றுள்ளது.

19 வயதான விஜயகாந்த் வியஸ்காந்த் கடந்த ஆண்டு இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார்.



ஏல பட்டியலில் இடம்பெற்றுள்ள இலங்கை வீரர்களின் விவரங்கள்.

குசல் பெரேரா
திஸர பெரேரா
கெவின் கொத்திகொட
மஹேஷ் தீக்சன
விஜயகாந்த் வியஸ்காந்த்
துஷ்மந்த சமீர
வனிந்து ஹசரங்க
தசுன் ஷானக
இசுறு உதான

# லடாக் எல்லையில் இருந்து சீனாவின் படைகள் வாபஸ்



லடாக்கின் இமயமலை பகுதியில் இந்திய – சீன எல்லைப் பகுதிகள் 1,597 கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ளன. இங்கு ஊடுருவல் ஏதும் நிகழ்ந்துவிடாமல் தடுக்க இரு நாட்டு படைகளும் முகாம் அமைத்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் சீனப் படைகள் இந்திய கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஊடுருவியது. அவற்றை தடுத்து நிறுத்தும் பணியில் இந்தியா இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் ஜுன் 14 ஆம் திகதி சீனாவை சேர்ந்த பெரும் படையினர் அத்துமீறி உள்ளே நுழைய முயன்றனர். அவர்களை இந்திய வீரர்கள் தடுத்து நிறுத்தியபோது இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

இந்திய வீரர்கள் 20 பேர் வீர மரணம் அடைந்தனர். சீனதரப்பில் 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். இதன்பின்பு அந்த பகுதியில் கடும் பதற்றம் நிலவியது. இரு தரப்பினரும் இராணுவத்தை குவித்தார்கள்.

அதே நேரத்தில் இந்திய இராணுவம் முன்னேறி சென்று அங்குள்ள ரசல்லா பகுதியில் உள்ள உயரமான மலை முகடுகளை கைப்பற்றினார்கள்.

இரு நாட்டு படைகளும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நேர் எதிரே நின்றனர். எனவே எந்த நேரத்திலும் பெரிய அளவில் மோதல் வெடிக்கலாம். இது போராக கூட மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதே நேரத்தில் பதற்றத்தை தணிப்பதற்காக இரு நாட்டு தரப்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதில் படைகளை வாபஸ் பெற முதலில் சம்மதித்தாலும், பின்னர் சீனா பிடிவாதமாக இருந்து அதே இடத்தில் படைகளை குவித்து உள்ளது. பதிலுக்கு இந்தியாவும் படைகளை குவித்தது.

ஆனாலும், இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் ஜெயசங்கர் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் சீனாவுடன் தொடர்ந்து பேசினார்கள்.

மேலும் இராணுவ தளபதிகள் தரப்பிலும் தனியாக 9 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து சீனா தனது படையை வாபஸ் பெற சம்மதித்தது.

லடாக் எல்லையில் பாங்காங் ஏரி, டெப்சாங், காக்ரா ஹாட்ஸ்பிரிங்ஸ், டெம்சாக் ஆகிய இடங்களில் சீன படைகள் அத்துமீறி நுழைந்து முகாமிட்டு இருக்கின்றன.

இதில் பாங்காங் ஏரி பகுதியில் முதல் கட்டமாக படையை வாபஸ் பெறுவதற்கு சம்மதம் தெரிவித்தன. அதன்படி பாங்காங் ஏரியின் வடக்கு பகுதியில் படைகளை வாபஸ் பெறும் பணி நேற்று முன்தினம் தொடங்கியது.

சீன படைகள் இந்த இடத்தில் 200 க்கும் மேற்பட்ட போர் டாங்கிகளையும் நூற்றுக்கணக்கான பீரங்கி உள்ளிட்ட தாக்குதல் வாகனங்களையும் நிறுத்தி இருந்தது. அவற்றை வாபஸ் பெற்றது.

இதேபோல இந்தியாவும் நூற்றுக்கணக்கான டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களை நிறுத்தி இருந்தது. அவற்றை இந்தியாவும் வாபஸ் பெற்று வருகிறது.

பாங்காங் ஏரியின் வடக்கு பகுதியில் பல்வேறு மலை முகடுகள் உள்ளன. இதில் 3 ஆம் எண் கொண்ட மலை முகட்டுக்கு இந்தியப் படைகள் திரும்பி வருகின்றன.

சீனப் படைகள் 4 ஆம் எண் கொண்ட முகடு வரை வந்து முகாம் அமைத்திருந்தது. இப்போது அவர்கள் 8 ஆம் எண் முகட்டுக்கு திரும்பி செல்கின்றனர்.

அதற்கு இடைப்பட்ட பகுதியில் இருநாட்டு படைகளும் ரோந்து உள்ளிட்ட எந்த பணிகளும் மேற்கொள்ளக் கூடாது என்று உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

3 நாட்களில் போர் டாங்கிகள், ஆயுத வாகனங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி நாளைக்குள் அனைத்து போர் வாகனங்களும் வெளியேறிவிடும். இடைப்பட்ட பகுதியில் சிறிய கட்டுமானங்கள், பதுங்கு குழிகளை அமைத்திருக்கிறார்கள். அவற்றையும் அழித்துவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தையும் 15 நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து பணிகளும் முடிந்தபிறகு அடுத்த 48 மணி நேரத்தில் மீண்டும் இரு தரப்பிலும் பேச்சு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாங்காங் ஏரியின் வடக்கு பகுதியில் படை வாபஸ் நடந்து வந்தாலும், தெற்கு பகுதியில் இன்னும் படைகள் வாபஸ் பெறப்படவில்லை. அதேபோல டெப்சாங், காக்ரா ஹாட்ஸ்பிரிங்ஸ், டெம்சாக் ஆகிய இடங்களிலும் தொடர்ந்து இரு நாட்டு படைகளும் முகாமிட்டு இருக்கின்றன. அந்த இடங்களில் இருந்து வாபஸ் பெறுவது தொடர்பாக அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையில் முடிவு எடுக்கப்பட இருக்கிறது.

படைகள் வாபஸ் பெறப்படுவதால் எல்லையில் கடந்த 9 மாதங்களாக நிகழ்ந்து வந்த பதற்றம் தணியத் தொடங்கியுள்ளது.

## அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி முன்னாள் தலைவிக்கு முன்ஜாமீன்



அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்கிற நிபந்தனையுடன் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி முன்னாள் தலைவர் சாந்தா கோச்சாருக்கு மும்பை நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியுள்ளது.

சாந்தா கோச்சார் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கித் தலைவராக இருந்தபோது வீடியோகான் நிறுவனத்துக்கு ஆயிரத்து 875 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

இது வாராக்கடனாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்குக் கைம்மாறாகச் சாந்தாவின் கணவர் பெயரில் பல கோடி ரூபாயை முதலீடாகப் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிதி மோசடி வழக்கில் சாந்தா கோச்சார் இன்று மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

அப்போது அவரது மனுவை ஏற்ற நீதிபதி, அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்கிற நிபந்தனையுடன் முன்ஜாமீன் வழங்கினார்.

## பட்டாசு ஆலையில் வெடிவிபத்து ஏழு தொழிலாளர் உயிரிழப்பு



விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே அச்சங்குளம் கிராமத்தில் உள்ள மாரியம்மாள் பட்டாசு ஆலையில் இன்று திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்தில் சிக்கி 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். சுமார் 10ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பட்டாசு ஆலையில் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு படை வீரர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.



## ஹைதராபாத்தை சேர்ந்த இளம் பெண் மிஸ் இந்தியா 2020 பட்டம் வென்றார்

ஹைதராபாத்தைச் சேர்ந்த 23 வயதான இளம் பெண் மானசா வாரணாசி மிஸ் இந்தியாவாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இறுதிச்சுற்று அழகிப் போட்டியில் மானசா 'மிஸ் இந்தியா' பட்டத்தைக் கைப்பற்றி மகுடம் சூடினார்

பொறியியல் பட்டதாரியான மானசா கல்லூரி காலம் முதலே மாடலிங்கில் ஈடுபாடு கொண்டுள்ளார். வரும் டிசெம்பர் மாதம் நடைபெற்றுள்ள உலக அழகிப் போட்டியில் இந்தியாவின் சார்பில் மானசா பங்கேற்க உள்ளார்.

ஹரியானாவைச் சேர்ந்த மணிகா ஷியோகண்ட், 'கிராண்ட் இந்தியா' அழகியாக தேர்வு செய்யப்பட்டார்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆட்டோ செலுத்துனரின் மகள் மன்யா சிங் இரண்டாவது அழகியாக ரன்னர் அப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

## வறுமையிலும் விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றி இந்திய அழகியான ஆட்டோ ஓட்டுநரின் மகள்!



ஆட்டோ ஓட்டுநரின் மகள் இந்தியாவின் இரண்டாவது பேரழியாக தேர்வான நிலையில் வறுமையிலும் சாதித்து காட்டிய அந்த அழகிக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

விஎல்சிசி ஃபெமினா நடத்தும் மிஸ் இந்தியா 2020 அழகி போட்டி மும்பையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற இளம்பெண்களில் டாப் அழகிகளாக 15 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் முதலிடத்தை பிடித்த தெலுங்கானாவை சேர்ந்த 23 வயதான மானசா வாரணாசி மிஸ் இந்தியாவாக தேர்வானார். இதன் மூலம் டிசெம்பர் மாதம் நடக்கவிருக்கும் 2021 ஆண்டிற்கான உலக அழகிப் போட்டியில் மானசா இந்தியாவைப் பிரதிநித்துவப்படுத்த உள்ளார். அவரை தொடர்ந்து இரண்டாவது இடங்களை பிடித்து ரன்னர அப் ஆக உத்திரபிரதேசத்தை சேர்ந்த மான்யா சிங் மற்றும் ஹரியானாவை சேர்ந்த மனிகா சிஷோகந்த் தேர்வாகியுள்ளனர்.

இதில் இரண்டாவது அழகியாக தேர்வான மான்யா சிங் ஆட்டோ ஓட்டுநரின் மகள். மிஸ் இந்தியாவாக தேர்வானதை தொடர்ந்து இந்த புகழை அடைய தான் கடந்து வந்த பாதையை மான்யா சிங் தனது இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து பலருக்கு நம்பிக்கையையும், மன உறுதியையும் அளித்துள்ளார். மான்யா சிங் உத்திர பிரதேசத்தின் குஷிநகரில் பிறந்துள்ளார். இவரது தந்தை ஆட்டோ ஓட்டுநர் என்பதால் வறுமையில் வசித்து வந்த மான்யா தனது குழந்தை பருவத்தை சந்தோஷமாக கடந்து வரவில்லை. பல நாள்கள் உணவும், உறக்கமும் இன்றி தவித்த மான்யா பள்ளிப்பருவத்தின் போது மாலை வேலைகளில் வீடுகளில் பாத்திரங்கள் கழுவும் வேலையையும், அதன் பின்னர் இரவில் கால் சென்டரிலும் பணியாற்றி தந்தைக்கு தோள்கொடுத்துள்ளார். மான்யாவின் படிப்பிற்காக நகைகளையும் அடகு வைத்துள்ளார் அவரது தாய். படிப்பிற்கு பின்பு வீட்டிலிருந்து வெளியேறிய மான்யா வேலைத்தேடி ஓடி அலைந்துள்ளார்.

ஆட்டோ அல்லது ரிக் ஷாவில் பயணித்தால் செலவாகும் என்பதால் பல கிலோமீற்றர் தூரம் வரை நடந்தே சென்று தான் செல்ல வேண்டிய இடத்தை அடைந்துள்ளார். எனினும் , அவரது மனதில் சாதிக்க வேண்டும் என்ற உறுதி மட்டும் அசைக்க முடியாதப்படி இருந்துள்ளது. ஒரு பக்கம் வேலை பார்த்துக் கொண்டு அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தில் படித்த மான்யா, மற்றொருபுறம் சாதிக்க கருதி பேன் ஷோக்களில் கவனம் செலுத்தி வந்துள்ளார். தனது விடா முயற்சி மற்றும் மன உறுதி மூலம் இன்று சாதித்தும் காட்டியுள்ளார்.

வெற்றிக்கு பிறகு தனது வாழ்க்கை பயணத்தை பகிர்ந்துக் கொண்ட மான்யா, உங்களது கனவில் நீங்கள் உறுதியாக இருந்தால் இந்த உலகில் எதுவும் சாத்தியமே என்று பெருமையுடன் கூறியுள்ளார். வறுமையை வென்று, இந்தியாவின் இரண்டாவது அழகியான மான்யாவுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்றே கூறலாம்.

# அடுத்தடுத்து மோதிக்கொண்ட 130 வாகனங்கள் அமெரிக்காவின் டெக்சாசில் பயங்கர விபத்து!




அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக ஏற்பட்ட விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி நொறுங்கின. இந்த விபத்தில் இதுவரை ஆறு பேர் உயிரிழந்த நிலையில் முப்பதுக்கும் மேற்பட்டோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவை நோக்கி வீசும் ஆர்க்டிக் கடல் காற்று காரணமாக, அமெரிக்காவின் பெரும்பாலான மாகாணங்களில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால், பொதுமக்களும் வாகன செலுத்துனர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், டெக்சாஸ் மாகாணத்தின் ஃபோர்ட் வொர்த்தில் உள்ள இண்டர் ஸ்டேட் 35நி சாலையில், பனிப்பொழிவு காரணமாக விபத்து ஏற்பட்டது. இதனால், அதிவேகத்தில் வந்த வாகனங்கள் அடுத்தடுத்து ஒன்றன் மீது மற்றொன்று மோதிக்கொண்டன. இந்த விபத்தில் கார், வான் முதல் 18 சக்கர ட்ரெய்லர்கள் வரை ஒன்றின் மீது மற்றொன்று மோதி சாலையில் உருண்டன. இந்த விபத்தில் இதுவரை 6 பேர் உயிரிழந்த நிலையில் 36 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த 65 பேர் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த சாலை விபத்தால், அங்கு போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறையும் போக்குவரத்துத் துறையும் இணைந்து விபத்தில் சிக்கிய வாகனங்களையும் காயமடைந்தவர்களையும் மீட்டு வருகின்றனர்.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு வீரர்கள், சாலையை மறைக்கும் அளவிற்கு ஏற்பட்ட பனிமூட்டமே விபத்துக்கு காரணம். இந்த விபத்தில் சிக்கியவர்களில் பெரும்பாலானோர், அவசரமாக பணிக்கு சென்ற சுகாதார பணியாளர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

## பொருளாதாரம், மற்றும் முக்கிய விவகாரங்கள் குறித்து சீன அதிபருடன் ஜோ பைடன் தொலைபேசியில் பேச்சு



அமெரிக்காவின் அறிவுசார் சொத்துகளை, தொழில்நுட்பங்களை திருடுவதுடன், நியாயமற்ற பொருளாதார நடைமுறைகளில் ஈடுபடுவதாக சீனா மீது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வந்தார். இந்த விவகாரத்தில் இரு தரப்பு மோதல்கள் வலுத்து, வர்த்தகப்போர் தொடங்கியது. சீனப்பொருள்கள் மீது அமெரிக்காவும், அமெரிக்க பொருள்கள் மீது சீனாவும் கூடுதல் வரிகளை விதிக்கின்றன.

இந்த தருணத்தில், ஜோ பைடன், அமெரிக்க ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னர் முதல் முறையாக சீன அதிபர் ஜின்பிங்கை நேற்று முன்தினம் தொலைபேசியில் அழைத்து பேசினார். சீனாவில் இன்று (வெள்ளிக்கிழமை) சந்திர புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. இதையொட்டி ஜின் பிங்குக்கும், சீன மக்களுக்கும் ஜோபைடன் முதலில் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

சீனாவின் நியாயமற்ற பொருளாதார செயல்பாடுகள், ஹொங்காங்கில் தேசிய பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்து, ஜனநாயக ஆர்வலர்களை ஒடுக்கும் சீனாவின் நடவடிக்கைகள், சின்ஜியாங்கில் உய்குர் இன மக்கள் மீது சீனா கட்டவிழ்த்து விடும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்டவற்றில் சீன அதிபர் ஜின்பிங்கிடம் ஜோ பைடன் தனது கவலையை வெளியிட்டார்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றை எதிர்த்து போராடுவது, உலகளாவிய சுகாதார நெருக்கடிகளால் எழுந்துள்ள சவால்கள், பருவநிலை மாற்றம், ஆயுத பெருக்கத்தை தடுத்தல் உள்ளிட்டவை பற்றியும் ஜோ பைடனும், ஜின்பிங்கும் விவாதித்து உள்ளனர்.

மோசமான உறவால் இரு தரப்புக்கும் பேரழிவு ஏற்படும் என்று ஜோ பைடனிடம் ஜின்பிங் எச்சரித்தார் என்று சீன அரசு டெலிவின் கூறியது. இரு தரப்பு உறவுகள், முக்கிய சர்வதேச விவகாரங்கள், பிராந்திய பிரச்சினைகள் குறித்து ஜின்பிங்கும், ஜோ பைடனும் விவாதித்தனர் என்று சீன டெலிவின் தெரிவித்தது.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஜோ பைடன் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அதில் அவர், அமெரிக்க மக்களுக்கு பலன் அளிக்கும்போது சீனாவுடன் இணைந்து பணியாற்றுவேன் என்று சீன அதிபர் ஜின்பிங்கிடம் தெரிவித்தேன் என கூறி உள்ளார்.

வொஷிங்டன் வெள்ளை மாளிகை இவ்விரு தலைவர்கள் சந்திப்பு பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், சீனாவின் கட்டாயமான, நியாயம் இல்லாத பொருளாதார நடைமுறைகள், ஹாங்காங் ஒடுக்குமுறை, சின்ஜியாங்கில் மனித உரிமைகள் மீறல் போன்றவற்றை ஜனாதிபதி ஜோ பைடன், ஜின்பிங்கிடம் வலியுறுத்தி பேசினார் என கூறப்பட்டுள்ளது.

## பிரித்தானியாவில் தடுப்பூசி பெற்ற 236 பேர் பலி!



பிரிட்டனில் பைஸர் நிறுவனம் தயாரித்த தடுப்பூசியை எடுத்துக் கொண்ட 236 பேர் ஒவ்வாமை உள்ளிட்ட காரணங்களால் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு மருந்து மற்றும் சுகாதார ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் தயாரித்த கொரோனா தடுப்பூசியை எடுத்துக்கொண்ட 90 பேரும் மரணமடைந்துள்ளனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் வயதானவர்கள் என்றும், கொரோனா தடுப்பூசியால்தான் உயிரிழந்தனரா என்பது உறுதியாகவில்லை என்றும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் தற்போதுவரை சுமார் 1 கோடி பேருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என் பது குறிப்பிடத்தக்கது.



## ரஷ்யாவில் நீல நிறத்திற்கு மாறிய நாய்கள்..!

ரஷ்யாவில் நீல நிறத்தில் கும்பலாக சுற்றித்திரியும் நாய்களின் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

நிஷ்னி நோவ்கோரோட் மாகாணத்தில் உள்ள ஹைட்ரோசி யானிக் அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அருகே சுற்றித்திரியும் நாய்களே இதுபோன்று நீல நிறமாறியுள்ளன.

தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காப்பர் சல்ஃபேட் போன்ற இரசாயனங்கள் நாய்களின் ரோமங்களில் படர்ந்ததால் அவற்றின் நிறம் மாறியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## மியன்மார் இராணுவ தலைவர்கள் மீது பொருளாதார தடை – அமெரிக்கா அதிரடி

மியன்மாரில் நடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் அந்த நாட்டின் நாடாளுமன்றம் கடந்த 1ஆம் திகதி கூடவிருந்த நிலையில் இராணுவம் அதிரடியாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.



இதை வல்லரசு நாடான அமெரிக்கா கடுமையாக கண்டித்தது. அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

மியன்மார் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துகின்றனர். ஆனால் அங்கு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை அந்த நாட்டின் இராணுவ தளபதி மின் ஆங் ஹலேங் நியாயப்படுத்தினார். இந்த நிலையில் மியன்மார் இராணுவ தலைவர்கள் மீது அமெரிக்கா அதிரடியாக பொருளாதார தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இதையொட்டி வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசியபோது, மியன்மாரில் நடந்த சதித் திட்டத்தின் மீதான விளைவுகளை சுமத்த தொடங்குவதற்கான தொடர்ச்சியான நடவடிக்கைகளை அறிவிக்கிறேன். அமெரிக்காவில் மியன்மார் அரசாங்க நிதியில் இருந்து 100 கோடி டொலர்களை எடுப்பதற்கான முறையற்ற அணுகலைத் தடுக்க அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. மியன்மாரில் ஆட்சி கவிழ்ப்பில் தொடர்புடைய ராணுவ தலைவர்கள், அவர்களது வணிக நலன்கள், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மீது பொருளாதார தடை விதிக்கும் நிர்வாக உத்தரவுக்கு ஒப்புதல் அளித்துள்ளேன் என கூறினார்.

இந்த நடவடிக்கைக்கு முதல் கட்டமாக இலக்கு ஆகிறவர்கள் இந்த வாரம் அடையாளம் காணப்படுவார்கள். மியன்மார் அரசு சொத்துகளை முடக்குகிறோம் எனவும் அவர் அறிவித்தார்.

## சீனாவில் பி.பி.சி. செய்தி ஒளிபரப்புக்கு அனுமதி மறுப்பு ஊடக சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதாக அமெ. கண்டனம்



சீனாவில்தான் முதன்முறையாக கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. அங்கிருந்துதான் உலக நாடுகளுக்கு அது பரவியது என பொதுவான குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் சீனா இந்த குற்றச்சாட்டை மறுத்து வருகிறது.

தற்போது உலக வல்லுநர்கள் சீனாவில் கொரோனா வைரஸ் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். அதேபோல் ஜிங்ஜியாங் மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராக அடக்குமுறையை கையாண்டு வருவதாக குற்றச்சாட்டும் உள்ளது.

இதற்கிடையே, கொரோனா வைரஸ் தொற்றை சீனா கையாண்ட விதம், ஜிங்ஜியாங் பிரச்சினை குறித்து தவறான செய்திகளை பி.பி.சி. உலக செய்தி ஒளிபரப்பியதாக சீனா குற்றம்சாட்டியது. இதையடுத்து, பி.பி.சி. செய்தி ஒளிபரப்புக்கு சீனா தடை விதிக்க இருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில், பி.பி.சி. உலக செய்திகள் ஒளிபரப்பிற்கு சீனா தடைவிதித்துள்ளதற்கு அமெரிக்கா கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்கா பாதுகாப்பு துறை செய்தி தொடர்பாளர் நீட் பிரைஸ் கூறுகையில், பி.பி.சி. செய்தி ஒளிபரப்புக்கு சீனா தடைவிதித்துள்ளதற்கு அமெரிக்கா கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இதன்மூலம் ஊடக சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையை மறைப்பதில் சந்தேகம்!

## ஜே.வி.பி. சாடல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. இந்த அறிக்கை ஜனாதிபதியால் தொடர்ந்தும் மறைக்கப்படுமானால் அது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இராஜகிரியவிலுள்ள மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்கும் உள்ளது. கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சி தலைவர் கூட்டத்திலும் இதனை வலியுறுத்தினோம். இது மாத்திரமன்றி அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கிறது. இதில் ஒரு லட்சத்துக்கும் அதிக பக்கங்கள் காணப்படுகின்றமையால் அச்சிடுவதற்கு சிரமம் எனில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளங்களிலாவது பதிவேற்ற முடியும்.

இதற்கான எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாவிட்டால் இதனை அரசாங்கம் மறைக்கின்றதா என்ற சந்தேகம் எழும். இதனை மறைத்து வைப்பதற்கான உரிமை ஜனாதிபதிக்கோ அரசாங்கத்துக்கோ இல்லை.

உண்மையான அறிக்கையிலுள்ள பக்கங்கள் நீக்கப்படக் கூடிய அபாயம் தற்போது காணப்படுகிறது. எனவே, குறித்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கும் போது அதனை ஆவண பாதுகாப்பு சபைக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை ஒரு சட்டமாக உருவாக்கினாலும் அது வரவேற்கத்தக்க விடயமாகும்.

கொரோனா சடலங்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறிய விடயம் பொதுஜன பெரமுனவினரைத் தவிர ஏனைய அனைவருக்கும் ஒரே அர்த்தத்திலேயே புரிந்துள்ளது.

பொதுஜன பெரமுனவினருக்கு மாத்திரம் அதன் அர்த்தம் வேறொன்றாகப் புரிகிறது என்றால் அவர்கள் வேற்று கிரகத்தை சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும்.

அத்தோடு பிரதமராயினும் தீர்மானமொன்றை எடுப்பதில் எவ்வகையான சிக்கல் காணப்படுகிறது , அவருக்கு எவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. – என்றார்.

# திருமலையில் 24 தமிழர்கள் படுகொலை நினைவு: அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் உணர்வுடன் அஞ்சலி!



திருகோணமலை, கிளிவெட்டி குமாரபுரத்தில் படுகொலை செய்யப்பட் தமிழ் உறவுகளின் 25 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று (வியாழக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

1996 பெப்ரவரி 11ஆம் திகதி, ஒன்பது பெண்கள், 12 வயதிற்குட்பட்ட ஒன்பது சிறுவர்கள் உட்பட 24 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனை நினைவுகூரும் வகையில், அப்பகுதிமக்கள் அங்குள்ளகோயிலொன்றில் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்நிலையில், இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியில் பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவுத்தூபி அமையப்பெற்ற இடத்தில் உயிரிழந்தவர்களது உறவினர்கள் ஒன்றுகூடி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, கோயில் பூசை வழிபாட்டின்போது செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், நினைவுத்தூபி அமையப்பெற்ற இடத்தில் மாத்திரம் செய்தி சேகரிக்க முடிந்ததாக ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிறுவனின் மரணத்துக்கு நீதியைக் கோரி சடலத்துடன் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்!





வவுனியா, ஜன. 12

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவ்வி பகுதியில் ஏழு வயது பாடசாலை மாணவன் கடந்த செவ்வாய்க்கிழமை கிணற்றிலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

இந்நிலையில், சிறுவனின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில், அவரின் மரணத்துக்கு நீதி வேண்டும் எனத் தெரிவித்து கிராம மக்கள் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதுதொடர்பாகத் தெரியவருவதாவது –

மேற்படி சிறுவன் கடந்த ஒன்பதாம் திகதி மதியம் இரண்டு மணியளவில் வீட்டிலிருந்து தனியார் வகுப்புக்குச் செல்வதாகத் தெரிவித்துவிட்டு அயல்வீடொன்றுக்கு விளையாடச் சென்றுள்ளார். இந்நிலையில், நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதையடுத்து அவரைக் காணவில்லை என ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மறுநாள் காலை அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குறித்த சிறுவன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டமையுடன் சிறுவனின் புத்தகப்பை கிணற்றுக்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

இதனையடுத்து, உயிரிழந்த சிறுவனுடன் விளையாடிய அயல்வீட்டுச் சிறுவனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் முரணான தகவல்களை அவர் தெரிவித்திருந்தார்.

முகமூடி அணிந்த ஒருவர் மோட்டார் சைக்களில் வந்து சிறுவனைத் தூக்கிச் சென்றார் என முதலில் தெரிவித்தமையுடன், விளையாடிக் கொண்டிருந்தபோது தவறுதலாக கிணற்றில் விழுந்தார் எனப் பின்னர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, சந்தேகத்தின் அடிப்படையில் அந்த சிறுவன் அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், ஓமந்தை பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, கிராமத்தில் ஒன்றுகூடிய பொதுமக்கள் வீதியில் சடலத்தையும் பதாகைகளையும் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறுவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்த அவர்கள், உண்மைத் தன்மை கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2021இல் வெளியிடப்பெற்றது.